ஆஸாத்

AZAD

THE ONLY POLITICAL TAMIL FORTNIGHTLY
KUMBAKONAM

FOUNDER: HAJEE - M. ABDUR RAHMAN SAHIB

EDITOR: MAULANA ABDUL HAKEEM

26-2-'51

760
1-51

CONNEMARA PUBLIC LIBRARY
29 MAY 1955
MADRAS

குறைந்த விலையில் அழகிய ஆடைகள்

Truthful
READY MADE CLOTHES

"ட்ரூத்புல்" ஆடைகளே!

எங்கள் எம்பிராய்டரி வேலைப்பாடுகள்
ஒரு தனி ரகம்.
சகோதர சகோதரிகள் யாவரும் ஒரு முறை
வாங்கி அணிந்து ஆனந்தம் அடைய
வேண்டுகிறோம்
இந்தியாவெங்கும் ஒரே விலைக்கு
விற்கப்படுகிறது.

தயாரிப்பவர்கள்.
தி ட்ரூத்புல் மனுபாக்சரிங்
கம்பெனி லிமிடெட், மதுரை.

பொருளடக்கம்.

காமன்வெல்த் நாடுகளுக்கிடையே
வேற்றுமை.

உணவு விஷயம்.

ஆசியா அன்னநடை விரும்பவில்லை.

மறவோம் மஹாத்மாஜீ
அஞ்சலிப்பா பஞ்சகம்.

செய்திகள்.

கொளும்பு திட்டம்.

ஸாத் தமிழ்பத்திரிகை

தனிப்பிரதி அணா 2

'AZAD' NATIONAL TAMIL BI - MONTHLY KUMBAKONAM.

ஆஸாத்

தமிழ் தேசிய மாதமிருமுறை பத்திரிகை கும்பகோணம்.

மலர் 4 | விக்ருதி௵ மாசி௴ 14௳ (26—2—1951) ஹிஜ்ரி 1370 ஜமாத்-உல்-அவ்வல் 19௳ திங்கட்கிழமை | இதழ் 2

காமன்வெல்த் நாடுகளிடையே வேற்றுமை

கீழ்க்கோடி பிரச்னைக்கு பரிகாரம் என்ன ?

"சைனா ஒரு பெரும் பூகமாகும். ஆகவே அது உறங்கிக்கொண்டிருப்பது நல்லது. விழிப்படைந்தால் அகில உலகிலும் குழப்பம் ஏற்பட்டுவிடும். ஆகவே அதை எழுப்பவேண்டாம்." என்று சுமார்150 வருடங்களுரகு முன் தன் உச்சநிலையை அடைந்த நெப்போலியன் கூறினார். இன்று சைனா விழித்தெழுந்துவிட்டது. உறங்கிக்கொண்டிருந்த காலம் மலையேறிவிட்டது. வாழ்வின் நவீன ராஜபாட்டையில் முன்னேறிக்கொண்டிருக்கிறது. இருபதாம் நூற்றாண்டிலேறபட்ட இம்மாபெறும் மாறுதல் அகில உலத்தையும் கலக்கமடையச்செய்து விட்டது. இக்கலக்கம் பெரும் கலகத்தை உண்டுபண்ணிவிடுமோ என்ற பயம் ஏற்பட்டுவிட்டது. அவ்விதமாயின்மானிடவர்க்கம் மற்றொருமுறை கடுமையான சோதனைக்குள்ளாகி பெரும் துன்பங்களை அனுபவிக்க நேரிடும்

பன்னூறாண்டுகளாக பல்வித குழப்பங்ளுக்கிறையாகிக் கிடந்த ஒரு நாடு புராதன நாகரீகத்தைக் கொண்டதாயினும் நெடுங்காலம் அன்னியவல்லரசுகளின்பேய்ப்பிடியில் சிக்கி படாதபாடு பட்டுவந்த ஒரு நாடு-பலமிக்க மத்திய அரசாங்கம் ஒன்று அமைக்கமுடியாது வல்லரசுகளின் நித்திய தலையீடுகளால் வருந்திவங்க ஒரு நாடு அபினியே அன்பின் சிகரம் மதுவே மதக் கோட்பாடு என்று மதித்து, சிறு அபினித்துண்டுக்கு தன் வாழ்வின் சகலபொருப்புக்களையும் அர்ப்பணித்த ஒரு நாடு- இன்று உன்னத லட்சியங்களை நிறைவேற்றிவைக்கும் ஆறறலுடன் விழித்தெழுந்ததைக் கண்டு, நேற்றுவரை அதை தூங்கச்செய்ய பற்பல தந்திரோபாயங்களைக் கையாடிய பிற நாடுகள் பலவும் அதன்முன் சாஷ்டாங்கமாய் பணிய முற்படுவது ஆச்சரியம் அளிக்கும் விஷயமல்லவா? அதற்குக் காரணமென்ன?— "மஹாத்மா புத்தர் அஹிம்ஸாமூர்த்தியே ஆயினும், திரும்பத் திரும்ப அறையப்பட்டால் நிச்சயம் கோபம் கொண்டு பதிலுக்கு அறைவார்" என்று ஒரு சீன பழமொழி கூறுகின்றது சீனாவின் நிலைமை அதற்கு முற்றிலும் பொருந்தும். இன்று சீனதேவியை காலால் எட்டி உதைக்க உலகம் விரும்புகிறது, சீன புரட்சி முடிவடைந்து ஓராண்டுகூட ஆகவில்லை. புரட்சிக்குப்பின் யுத்த விளைவுகளைப்போக்கவும் முன்னேற்ற காரியங்களை நிறைவேற்றவும், நீண்டகாலமும், பெருநிதியும், தக்க சூழ்நிலையும் அவசியம். இந்த ஓராண்டில் சீனாவுக்கு அவை கிடைத்தனவா? நிம்மதியுடன் சீன மக்கள் முன்னேற்றத் துறையில் கவனம் செலுத்த முடியுமா? இன்றுவரை உலகின் பெரும்பாகம், சீனாவை அங்கீகரிக்கவில்லை என்பது காலப்போக்கின் விசித்ரமே நாட்டை விட்டு ஓடி, உலகமனைத்தின் ஏச்சுக்கும் பாத்திரனான ஷியாங் கே ஷேக்கே சீனாவின் உண்மை அதிபர் என்று நினைக்கின்றனர் ஆனால் சீனநாட்டின் பரம விரோதிகளின் பேராசைகளை நிறைவேற்றி வைக்கக் கூடியவர் அவரே என்பதை யாவரும் அறிவர். 1950-மே மாதத்தில், மேற்கத்திய நாடுகளிடம் வைத்த நம்பிக்கை வீணாகிவிட்டதை உணர்ந்த கொரிய மக்கள் தங்கள் விதியை தீர்மானிக்க தாங்களே முற்பட்டதும், பிற்போக்குவாதி சிங்மென்ரீ, ஐ நா சபையில் கோஷ்டி மனப்பான்மை கொண்ட நாடுகள் முதலியவற்றின் உதவியுடன, கொரியரின் விடுதலைப் போராட்டத்தை முறியடிக்கும் காரியத்தில் அமெரிக்கா முனைந்து,கொரியாமுழுவதையும் ஆக்ரமிக்க யாலு நதி வரை முன்னேறிவிட்டது. சீனாவுக்கு சொந்தமானதும், கெய்ரோ உடன்பாடுபடி சீனாவிடம் அளிக்கப்பட வேண்டியது

மான பார்மோஸா (டெய்வான்) வை ஆக்ரமித்து சீனக் கடலில் தனது கடற்படையை நிறுத்தியது. இந்தோ சீனவில் பாவோடாயின் பொம்மை ஆட்சிக்கு உதவியது சுதந்திரம் அளிக்கப்போவதாய் கூச்சல்போட்டு திரைமறைவில் ஜப்பான் முன்னேற்றவாதிகளை பீரங்கிகளைக்கொண்டு நசுக்கியது ஜப்பான், கொரியா, பார்மோஸா, இந்தோசீனமுதலிய விடங்களில் அமெரிக்கா தலையிடுவதற்கு காரணம் என்ன? புரட்சிக்குப் பின் முன்னேறிவரும் சீனவை சூழ்ந்த, அதன் முன்னேற்றிற்கு முட்டுக்கட்டையிட்டு, மற்றொருமுறையும் அந்நாட்டை சுரண்டவே அமெரிக்கா விரும்புகிறது அதற்காக கீழ்க்கோடி நாடுகளில் தலையிட்டு தில்லுமல்லுகள் செய்துவருகிறது என்பதை யாரால் மறுக்கமுடியும்.

கடந்த ஆறுமாத காலத்தி அமெரிக்க அந்நிய நாட்டு கொள்கை என்னவென்பதை உலகம் தெளிவாய் அறிந்துகொண்டதாகையால், கீழ்க்கோடி நாடுகளில் அது செய்துவரும் தில்லுமல்லுகளை மேலும் விவரிக்க வேண்டிய அவசியமில்லை. இச்சமயம் காமன் வெல்த் நாடுகளின் போக்கையே ஆராயவேண்டும் ஏனெனில் அவற்றின் ஒத்துழைப்பின்றி அமெரிக்காவால எந்த காரியத்திலும் வெற்றிகாண முடியாது. சமீபத்தில் லண்டன் மஹாநாட்டில் ஐரோப்பிய பாதுகாப்பு, கீழ்க்கோடி பிரச்னை, முதலிய உலக விஷயங்கள் விவாதிக்கப்பட்டன. பத்துநாள் நடைபெற்ற அம்மஹாநாட்டில் அதிக நேரம் ஆலோசிகிகப்பட்டது. தூரக்கிழக்கு நாடுகள் விஷயமே. சீன விஷயத்தில் காமன்வெல்த் நாடுகள் ஓரேவிதப் போக்கை கொண்டவையல்ல. ஆயினும் கீழ்க்கோடிப் பிரச்னையில் அதிக முக்கியத்வம் வாய்ந்தது சீன விஷயமே. காமன்வெல்த்தில், பிரிட்டன், கானடா, இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, ஆஸ்திரேலியா நியூஜிலாந்து தென்னாப்பிரிக்கா. தென்ரொடீஷியா முதலிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அவற்றில் இந்தியா பாக்கிஸ்தான் பிரிட்டன், இலங்கை ஆகிய நான்கு நாடுகளும் சீன கம்யூனிஸ்டு சர்க்காரை அங்கீகரித்துள்ளன. ஆனால் மற்ற நாடுகள் மோஸிதூங் அரசாங்கத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ஷியாங்கே ஷேக்கே சீன பிரதிநிதி என்கின்றன. ஐ. நா ல் பீகிங்குக்கு பதில் டெய்வானே (பார்மோஸா) அங்கம் வகிப்பது நியாயம் என்கின்றனர். பிரிட்டிஷ் அயல் நாட்டு மந்திரி மிஸ்டர் பெவின் கொரியா-சீன விஷயமாய் சமர்ப்பித்த ஆறு அம்ச திட்டத்தை காமன்வெல்த் நாடுகள் விவாதித்த முறையே அவற்றிடையே வேறுபாடுகள் உள்ளன என்பதற்கு தக்க ருசுவாகும். பெவின் தீர்மானத்தை ஆலோசிக்கையில், "கொரியாவில் சீன யுத்த நிறுத்தம் செய்யாவிட்டால் அதை ஆக்கிரமிப்பு நாடு என்று பிரகடனப்படுத்தி, நேச நாடுகள் யாவும வியாபாரம் முதலிய துறைகளில் அதை விலக்கவேண்டும்," என்று அமெரிக்காவின் குறிப்பை கருத்தில்கொண்டே விவாதித்தனர் என்றே தெரிகிறது. ஆகவே பெவின் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டால் காமன்வெல்த் நாடுகள் வெளிப்படையாக அமெரிக்காவுக்கு எதிரான போக்கை மேற்கொண்டதாகிவிடும். ஆனால் கானடா, ஆஸ்திரேலியா, நியுஜிலாந்து, தென்னாப்பிரிக்கா எவ்விதத்திலும் அமெரிக்காவுக்கு எதிராயிருக்க விரும்பவில்லை. ஆஸ்திரேலியா, நியுஜீலாந்து நாடுகளில் சாம்ராஜ்யவாதிகளும் இனவேறுபாட்டை ஆதரிப்பவர்களுமான கன்சர்வேடிவ்கள் ஆட்சி செலுத்துகின்றனர். தென்னாப்பிரிக்காவோ, இனவேறுபாட்டுக்கு சிகரமாகும் கானடாவும் அமெரிக்காவும் மிகவும் நெருங்கிய சம்பந்தம் உடையவை. காமன்வெல்த்தின் ஒத்துழைப்பின்றி உலக நாடுகளை யுத்தத்திற்கு பலியிட அமெரிக்காவால் முடியாது என்பது திண்ணம். துரதிருஷ்டவசமாக முதலாளி வர்க்கம் ஒற்றுமையை விரும்பவில்லை, தனிப்பான்மையை வரவேற்கிறது மனிதத்தன்மையயல்ல மிருகத்தன்மையையே நேசிக்கிறது. ஆகவே முதலாளித்துவத்தை ஆதரிக்கும் நாடுகள் யுத்தத்தால் விளையும் அனர்த்தங்களால் அஞ்ச முடியுமா? ஏழை மக்களின் இரத்தம் பாய்ந்தோடுவதாலும், செழித்து வளர்ந்த பயிர்கள் தீய்ந்துபோவதாலும், ஜன நெருக்கம் அதிகம் கொண்ட பட்டணங்கள் தரை மட்டமாவதாலேயே அவர்களுடைய பேய் மனம் சமாதானம் அடையும்.

மஹா நாட்டின்போது இந்தியா மேற்கொண்ட போக்கு சத்தியத்தை அடிப்படையாய்க் கொண்டதாகும். மேற்கு நாடுகள் கிழக்கு நாட்டு மக்களின் மனப்போக்கை அறிய முயலவில்லை. அதுதான் அவர்களின் பெருந்தவறு என்பதை பண்டித நேரு சுட்டிக்காட்டினார். "ஆசிய மக்கள் கொரிய யுத்தத்தை மேற்கு நாடுகளுக்கும் கிழக்கு நாடுகளுக்கும் இடையில் நடைபெறும் யுத்தமென்று எண்ணுகின்றனர். ஆனால் மேல் நாடுகளோ, தாங்கள் கம்யூனிஸ்டுகளை எதிர்ப்பதாய் நினைக்கின்றனராயினும் உண்மையில் ஆசிய தேசீயத்தின் மாபெரும் சக்தியை எதிர்த்தே போராடுகின்றன. பீகிங் தலைவர்கள் பலாத்காரத்தை மேற்கொண்டுள்ளனர். ஒரு திட்டப்படி அவர்கள் அக்காரியத்தில் ஈடுபட்டுள்ளதாய்த் தோன்றுகிறது. இச்சந்தர்பத்தில் சீனவுடன் நேரடி யுத்தத்தைத் தவிர்ப்பதொன்றே கீழ்க்கோடி பிரச்னைக்குப் பரிகாரமாகும் ஆகவே பொருளாதார பகிஷ்காரத்தினால் யுத்தம் மூண்டால் ஆசிய நாடுகள் சீனவுடனேயே சேரும். அதற்கு காரணம் சீன கம்யூனிஸ்டு நாடு என்பதல்ல, ஆசியநாடு என்பதே என்று மான்செஸ்டர் கார்டியன் எழுதுகிறது

மேற்கூறிய தலையங்கத்திற்குப பிறகும் கீழ்க்கோடிப் பிரச்னையில் நேரு சாக்கார் கொண்டுள்ள

CONNEMARA PUBLIC LIBRARY MAY 1955 MADRAS

ஆஸாத்

தமிழ் தேசிய மாதமிருமுறை பத்திரிகை

மலர் 4 } 26-2-1951 திங்கட்கிழமை { இதழ் 2

உணவு விஷயம்.

இஸ்கந்தாவில் ஜனவரி ஆரம்பத்தில், நாட்டின் உணவு நிலைமை திருப்திகரமா யிருப்பதாயும், வெளி நாட்டு உணவுதான்ய இரக்குமதி திருப்தியளிக்கக்கூடியதே என்று உணவு மந்திரி மிஸ்டர் மாணிக்லால் கன்யாலால் முன்ஷி கூறியிருந்தார். ஆனால் பதினைந்தே நாட்களுக்குப்பின் ஜனவரி 19 தேதியன்று உணவு நிலைமை மிகவும் கவலை யளிக்கக்கூடியதா யிருப்பதால் தேசமுழுவதும் 12-அவுன்ஸ் என்பதை 9 அவுன்ஸாக குறைக்கவேண்டியது அவசியம் என்று அறிவித்தார். ரேஷனில் ஏற்பட்ட இப்பெரும் வெட்டுக்கு காரணங்களை விளக்குகையில் மிஸ்டர் முன்ஷி கூறியவற்றின் கருத்தாவது:—

(1) இயற்கை அனர்த்தங்களால் உணவுதான்ய உற்பத்தியில் அறுபதுலட்சம் டன் குறைந்துவிட்டது.

(2) கோதுமை, கம்பு கையிருப்பு அளவு குறைந்து விட்டது. இரண்டுமாத இறக்குமதியால் அக்குறையை சரிக்கட்ட முடியாது.

(3) ரேஷன் குறைக்கப்படா விட்டால் அரிசி கையிருப்பு குறைந்துவிடும், ஆதலால் ஜூலை முதல் அக்டோபர் வரை அரிசி கிடைக்காது மக்களுக்கு பெரும் தொல்லையாகிவிடும்.

(4) அந்நிய நாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்ய முடியும் என்பது சந்தேகமே. உள்நாட்டிலோ அரிசி விளையும் பிரதேசங்கள் அதிகமழையால் பாழாகி விட்டன.

(5) இவ்வெட்டால் 1951 மார்ச்சு முடிய ஆறு லட்சம் டன் உணவுதானியம் மிச்சமாகும். அதனால் நிலைமை சற்று தெளியும்.

(6) வெளி நாடுகளிலிருந்து 37-லட்சம் டன் தானிய வகைகள் வாங்க பூர்வாங்க ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. முதல் மூன்று மாதங்களில் 9-லட்சம் 18-ஆயிரம் டன் இந்தியா வந்து சேர்ந்துவிடும். கடந்தவருடம் இதே மாதங்களில் 3-லட்சம் 5·ஆயிரம் 229டன் தானியமே இறக்குமதிசெய்யப்பட்டுள்ளது

(7) சர்வதேசநிலைமை நம்பிக்கையற்றதாக இருக்கிறது. யுத்தமேகங்கள் உலகத்தை சூழ்ந்துள்ளன. இந்நிலைமையில் தானியங்களைக் கொணர கப்பல் வசதி கிடைப்பது அசாத்தியம். ஆகவே முன்னேற்பாடாய் மூன்று அவுன்ஸ் வெட்டு அத்தியாவசியம் என்று தீர்மானிக்கப்பட்டது. இவ்வெட்டு சில வார காலமே நீடிக்கப்போகிறது.

ரேஷன் வெட்டுக்கு முன்ஷி கூறியுள்ள காரணங்கள் உண்மையானவை. அதை நாம் மறுக்க விரும்பவில்லை. தற்கால சூழ்நிலையில் அவர் மேற்கொண்டுள்ள முன்னேற்பாடுகளை பூரணமாய் வரவேற்பதுடன் பயங்கரமான இச்சந்தர்ப்பத்தில் பொதுமக்கள் சர்க்காருடன் பூரணமாய் ஒத்துழைக்கவேண்டும். என்று கேட்டுக் கொள்கிறோம். ஆனால் உணவு தானியத்தில் ஏற்பட்டுள்ள இவ்வித குறைக்காரணம் இயற்கை அனர்த்தங்கள், போக்குவரத்து சாதனக்குறைவு- ஆகிய இரண்டு காரணங்கள் மட்டுமே என்பதை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை மிஸ்டர் காட்கில் கூறியதுபோல் வேறு இரு காரணங்களும் உள்ளன. என்றே நினைக்கிறோம். அவர் கூறியதாவது:—

" தற்கால நிலைமை கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் கார் மகசூல் கொள்முதலாவதற்கு முன்பே ஏற்பட்டுவிட்டது. கடந்த 5 அல்லது 6 மாதங்களில் சர்க்காருக்கு கொள்முதலாகி வந்த தானிய அளவு படிப்படியாய்க் குறைந்து 40-சத வீதமாகி விட்டது. இவ்வித நிலைமையில் பற்றாக்குறைப் பிரதேசங்களின் தேவையை இரக்குமதியால் மட்டுமே பூர்த்தி செய்ய முடியும் உபரி பிரதேசங்களிலிருந்து மத்தியசர்க்கார் மாதம் 50-ஆயிரம் டன் தானியம் கிடைத்துவந்தது. ஆகவே 6½·லட்சம் டன் தானிய இறக்குமதியைக் குறைத்து விட்டது.

சர்க்கார் கவனக்குறைவாயிருந்ததே தற்கால நெருக்கடிக்குக் காரணம் என்பதை விவசாய இலாகா காரியதரிசியும் சுட்டிக்காட்டியுள்ளார்.

"உணவு விஷயம் உடனே கவனிக்கவேண்டிய விஷயமாகும். நிலத்தை சாகுபடிக்கு ஏற்றதாக்கநெடுங்காலம் பிடிக்கும். மேலும் ட்ராக்டர் முதலிய யந்திரங்களுக்கு பெரும் தொகை அவசியமாகும். இக்காரியத்திற்காக சர்வதேச பாங் நமக்கு அளித்த கடன் தொகை ஒருகோடி டாலரால் ஆண்டுதோறும் இரண்டு லட்ச ஏக்கா நிலத்தையே பண்படுத்த முடியும். வெறும் விளைச்சல் நிலத்தின் பரப்பை அதிகரிப்பதால் ஒரு பிரயோஜனமுமில்லை. விளையும் தரத்தை அதிகரிப்ப

தாலேயே நிலைமை சீர்பெறும்என்பதை யாவருமறிவர். உழைப்பு, நீர்வளம், உரம் முதலியவற்றாலேயே அக்காரியம் நிறைவேறக்கூடும். விஞ்ஞானத்தால் நமக்கு உரம், விதைகள் முதலியவற்றைத்தேர்ந்தெடுக்க பெரும் உதவி கிடைத்துள்ளது. ஆனால் அதனால்விவசாயிகள் பயன்பெற வகை செய்து கொடுக்கப்படவில்லை. விஞ்ஞானிகள் கூறும்வகைக்கும், விவசாயிகள் கடைப்பிடிக்கும் முறைக்கும் பெருத்த வித்தியாசமிருக்கிறது. ஆகவே, விஞ்ஞான முறையில் பெரும் அளவு மக்களை பழக்கச்செய்தனர். அதனால் அம்முறைகள் பாவியாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இந்தியாவில் இவ்விஷயத்தை யாரும் கவனிக்கவில்லை. இந்திய சர்க்கார் விவசாயத்துறையில் செலவழிக்கும் தொகை, நபர் ஒன்றுக்கு ஓரணாவுக்கும் குறைவே. அமெரிக்காவில் நபர் ஒன்றுக்கு 78 ரூபாய். கானடா 21 ரூபாய் பிரிட்டன் 2 ரூபாய் வீதம் செலவாகிறது, என்கிறார் விவசாய இலாகா காரியதரிசி கே. எல். பஞ்சாபி. மேலும் தொடர்ந்து கூறுகையில்:- 'ஒருபிரயோஜனமுமற்ற கால் நடைகளைப் பாதுகாக்கும் காரியம் நம் விவசாயக் காரியங்களில் குறுக்கிடுகிறது. 35 கோடிமக்கள் வயிற்றை நிரப்பவும் உடை உடுக்கச்செய்யவும்நாம்மேற்கொண்டுள்ள அதிமுக்கிய காரியத்துடன் எழுபது (70) கோடி 70 லட்சம் கால்நடைகளையும் பராமரிக்க நம்மிடம் 4 கோடி ஏகர் நிலங்களே உள்ளன. இக்கால்நடைகளில் ஆடுகள் குரங்குகள், வெட்டுக்கிளிகள் சேர்ந்தவையல்ல. நம் கால்நடைகளுக்கு போதிய உணவு கிடைக்கவில்லை என்பது வெளிப்படை. ஆகவே அவற்றால் உண்டாகும் பலன் குறைந்துவருகிறது. 70 கோடி-70 லட்சம் கால் நடைகளில் பாதியளவு ஒன்றுக்கும் உதவாத கால் நடைகளை ஒழித்துவிடும் காரியத்திலும் நம் மதக் கொள்கை குறுக்கிடுகிறது" என்கிறார் கே. எல். பஞ்சாபி.

உணவு தட்டுப்பாட்டுக்கு முக்கிய காரணம் மேற்கூறிய இரண்டு விஷயங்களிலும் நம் சர்க்கார் கவனம் செலுத்தினால் பிரச்னை வெகு எளிதில் தீரக்கூடும். அவற்றில் முதலில் குறிப்பிட்ட காரணத்தைப் போக்குவது வெகு சுலபம். சர்க்கார் நினைத்தால் நவீன விவசாய முறைகளில் உள்ள குறையை எளிதில் போக்க முடியும். இரண்டாம் காரணத்தைப் போக்க திடசித்தம் தேவை. ஆனால் துரதிருஷ்டவசமாக அது நம் சர்க்காரிடம் குடிகொண்டுள்ள திட சித்தமின்மை வருங்காலத்தில் நல்ல நிலைமை ஏற்பட அறிகுறியல்ல. உண்மையைக் கண்டும் தவறான மனப்பான்மைக்கு பிரதான்யம் அளிக்கும் எந்த நாடும் தொல்லைகளினின்றும் மீள முடியாது. புராதன பண்பாட்டில் பெருமை கொள்ளும் இந்தியா "மானிடரைவிட கால்நடைகளுக்கு" பிரதான்யம் அளிக்கிறது என்ற உலக அவச்சொல்லுக்கு இந்நாட்டை தற்கால இந்திய சர்க்கார் ஆளாக்குகிறது. இக்கொள்கையைக் கொண்டே இந்நாட்டின் நாகரிக தரத்தை உலக நாடுகள் தீர்மானிக்கின்றன.

முடிவில் முக்கியமான ஒரு விஷயத்தை சர்க்காருக்கு எடுத்துக்கூற விரும்புகிறோம். அதாவது தானிய விலை ஏற்றம். இன்றுவரை இந்திய ராஜ்யங்களில் ஒரே விலை ஏன் தீர்மானிக்க வில்லை. நெடுங்காலமாய் அதிக விலை கொடுத்து ரேஷனை வாங்கிவந்த மக்களிடம் மேலும் விலையை அதிகரித்து அதிகதொகை பெறுவது நியாயமா என்பதை சர்க்கார் யோசிக்க வேண்டும். மேலும் கடந்த ஆண்டு மத்திய சர்க்கார் அளித்த மானியம் 15 கோடிதான். இவ்வருடம் அதிகமானால் 19 கோடியாகும். 15 கோடிக்கும் 19 கோடிக்கும் அதிக வித்தியாசமில்லை. மத்திய சர்க்கார் அதை ஏற்க மறுப்பதாயின் மாகாண சர்க்கார்களாவது பொது மக்களுக்கு அதிக கஷ்டம் ஏற்படாதவாறு அதிகரிக்கப்பட்ட தொகைக்கு வகை செய்துகொள்ளவேண்டும் என்று வற்புறுத்துகிறோம். பட்ஜட்டில் இதற்கும் நிதி ஒதுக்கப்படவேண்டுமென கேட்டுக்கொள்கிறோம். பட்டினியால் வாடும் மக்களிடம் அதிக தொகை வசூல்செய்வது நல்லதல்ல என்பதை ஞாபகப்படுத்துகிறோம். பொது மக்கள்மீது அதிக சுமை அமத்துவதைவிட்டு, அந்நிய நாட்டு மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவி, நீண்ட கால திட்டங்கள் மந்திரிகளின் சுற்றுப் பிரயாணங்கள் உயர்ந்த சம்பளம், உயர்ந்த பதவி வகிக்கும் அதிகாரிகளின் ஊதியம் முதலியவற்றைக் குறைத்து உணவு விலை உயர்வை சரிப்படுத்திக்கொள்வது சிலாக்கியம். சமீபத்திலேயே சர்க்கரை துணி முதலியவற்றின் விலை உயர்த்தியிருக்கிறார்கள். மேலும் மேலும் பொது மக்களை சோதிப்பது நல்லதல்ல. அளவிலா தொல்லைக்குட்பட்டு மக்கள் எத்தனை நாள் பொறுமையுடனிருக்க முடியும் என்பதை சர்க்கார் ஆலோசிக்க வேண்டும்.

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

போர்க்கை விவரிக்க வேண்டிய அவசியம் உண்டா? ஜப்பானுக்கு ஆயுதமளிக்கும் திட்டத்தைப் பொருத்த மட்டில் இந்தியாவின் போக்கு தெளிவானதாகும். அதையே நேருஜி மஹாநாட்டில் விளக்கினார். ஜப்பானுடன் உடன்பாடு செய்து யுத்தத்தைத் தவிர்க்கவேண்டும் என்றே இந்தியா விரும்புகிறது. ஆனால் இத்துறையிலும் உண்மை நிலைமையை அது விட்டுக்கொடுக்க விரும்பவில்லை. பசிபிக் பாதுகாப்பு விஷயம் எதுவாயினும் சீனாவும், ரஷ்யாவும் கலந்துகொள்ளாவிடில் எவ்வித பலனும் அளிக்க முடியாதென்று வற்புறுத்துகிறது ஆகவே ஜப்பான் விஷயத்திலும் சீனாவும் ரஷ்யாவும் கலந்து கொள்வது [illegible] முக[illegible] [illegible]கிறது ஆனால்

மற்ற நாடுகள் சீனாவுக்கு சமஅந்தஸ்து அளிக்க விரும்பவில்லை. ஏன்? சம அந்தஸ்து அளிக்சப்பட்டால் பசிபிக்கில் சாம்ராஜ்யவாதிகளின் சுரண்டலுக்கு சாவுமணியடித்தாகிவிடும். சுருங்கக் கூறுமிடத்து ஆசிய முன்னேற்றம் ஐரோப்பிய அமெரிக்க அழிவுக்கு முதற்படியாகும். கீழ்க்கோடி வாழ்வு, மேற்கத்தி நாடுகளின் மரணமாகும். கேடுகெட்ட ஏகாதிபத்திய நாடுகள், காலம் மாறிவிட்டதை உணரவேண்டும். இன்று நிலைமையே வேறு. குறிப்பிட்ட காரணங்களால் சாம்ராஜ்யங்களுக்கு வெற்றி கிடைத்துவிட்டால் நிரந்தரமான நல்ல என்பதை அவை உணரவேண்டும். அஸ்தமனத்தின்போது, இருளைத்தாங்கும் கீழ் திசையே சூரியோதயத்தை தாங்கி உலகத்துக்கு பிரகாசம் அளிக்கக் கூடியது என்பதை வெள்ளை ஏகாதிபத்தியங்கள் உணர்வதே அவற்றிற்கு நல்லது.

ஆசியா அன்னநடை விரும்பவில்லை

31 அக் -1517 உலக சரித்திரத்தில் மிக முக்கியமாகும். அன்று கிருஸ்தவ வகுப்புவாத ஆதிபத்தியத்தை தகர்த்தெரிய மார்ட்டின் லூதர்போராட்டம் ஆரம்பித்தார் தொண்ணூற்று மூன்றுகொள்கைகள் கொண்ட தமது அறிக்கையை தேவாலய கதவில் ஒட்டி வகுப்புவாத ஆதிபத்ய எதிர்ப்பு போராட்டம் பிரகடனம் செய்தார். மார்ட்டின் லூதரின் இத்தீர மிக்க செயல் சரித்திர புகழ் பெற்ற சம்பவமாகும். அதன்பின் வகுப்புவாதம் குன்றி காலப் போக்கில் ஓர் நவீன அரசியல், பொருளாதார, நாகரீகப்போக்கு சக்தியடைய வாரம்பித்தது. முதன் முதல் 1529 ல் எட்டாம் ஹென்றி இங்கிலாந்தை பாதிரிகளின் பிடியினின்றும் விடுவித்தார். பாதிரிகளின் தாயகத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட படு தோல்வியால் மற்ற நாட்டினரும் சுயேச்சை மோகம்கொள்ளலாயினர். சமூக விடுதலை, சுதந்திரம் முதலிய உன்னத உணர்ச்சிகள் மக்களிடையே வளரலாயின. ஆனால் தேசநிர்வாகப பொறுப்பு அனைத்தும் தனிப்பட்ட மன்னர்களிடம் சிக்கியிருந்தமையால் தங்கள் சுய நலத்திற்கு குந்தகம் விளைவிக்காத அளவிலேயே மக்கள் உணர்ச்சி வளர சந்தர்ப்பம் அளித்துவந்தனர். ஆகவே பொது ஜன தொல்லைகள் பழைய அளவிலேயே இருந்துவந்தன. 'மேக்னகார்டா' ஹாபீஸ் கார்பஸ் (Magna Charta, Habies Corpus) முதலிய உரிமைப் பிரகடனங்கள் மூலம் பொதுமக்கள் தங்கள் உரிமைகளைக்காப்பாற்றி வந்தனர். ஆனால் எதேச்சாதிகாரம் அவர்கள் பிறப்புரிமையடையாவண்ணம் செய்துவந்தது. வருங்காலத்தில்கொண்ட நம்பிக்கையே அவர்களைப்பொறுமையுடனிருக்கச் செய்துவந்தது. முடிவில், மானிடவர்க்கத்தை எதேச்சாதிகாரத்தினின்று விடுவிக்கத் தக்க சக்திவாய்ந்த திட்டத்தை பதினேழாம் நூற்றாண்டில் ரூஸோ அளித்தார். "இம்ரானி ஒப்பந்தம் என்ற ரூஸோவின் நூல் விடுதலையடைய துடித்துக் கொண்டிருந்தும் எதேச்சாதிகாரத்தை முறியடிக்க வகையறியாது தவித்துக்கொண்டிருந்த மக்களுக்கு ஓர்சுலபமான வழி எடுத்தோதி அவர்களை போராட்ட அரங்கில் கொண்டுவந்து நிறுத்தியது. வகையறிந்த மக்கள் தங்கள் அபிலாஷைநிறைவேறுங்காலம்வந்துவிட்டதையறிந்தனர். வாழ்க்கையின் சகலதுறைகளிலும் புத்துயிர் தாண்டவமாடுவதைக் கண்டனர். ரூஸோவால்டேர் காவியங்களால் விழிப்புற்ற மக்கள், பிரஞ்சு புரட்சியால், பன்னூறாண்டு அடிமைத்தளைகள் அறுத்தெறிந்தனர். ஐரோப்பாவினின்றும் வெகுதூரத்தில் அட்லாண்டிக் சமுத்திரத்தின் மேற்குக் கரையில் அடிமைத்தளம் குற்றுயிராய்க் கிடக்கவாரம்பித்ததும் (1776) அக்காலமே, நீராவியின் அளவிலா சக்தியை மனித சமுதாயம் அறிந்ததும் அன்றே. அதனால் மாபெரிய யந்திர சாதனங்கள் தயாராகி மானிடசமுதாயத்தின் நவீன பொருளாதாரத்திற்கு வகை செய்யப்பட்டது. பத்தொன்பது இருபதாம் நூற்றாண்டு விடுதலைப் போராட்டங்கள் அநேகமாய் அன்று தோன்றிய நவீனபொருளாதார திட்டத்தின் பலனே எனலாம். மேற்கத்தியநாடுகளின் இந்நவீன அரசியல் பொருளாதார முன்னேற்றம் கீழ்நாடுகளின் சுதந்தரத்தை கொள்ளையிட்டது மேற்கு-கிழக்கு நாடுகளின் நம்பிக்கையற்ற உறவு உலக சரித்திரத்தில் ஓர் புதிய அத்யாயத்திற்கு அடிகோலியது. பிரஞ்சு புரட்சிக்குப் பின் வகுப்பு, இனம், சமூக உணர்ச்சி பலனற்று தேசீயம் ஓங்கவாரம்பித்தது. தொழிற் புரட்சி ஆரம்பமாகி மதம் வகித்து வந்த ஸ்தானத்தைக் கைப்பற்றிக்கொண்டது. "மானிடரிடையே நிறம்,—இனம், சரித்திரம் - மொழி- பழக்க வழக்கங்கள், கலாச்சாரம், நாகரீகம் முதலிய துறைகளில் ஒற்றுமைகொண்ட அல்லதுசற்றேறக்குறைய ஒற்றுமைகொண்ட கூட்டத்தினர் தம்மை ஓர் தனி சமுதாயம் எனக்கூறி, தங்கள் நலனை மற்றவர் நலனைவிட முக்கியமானது என்று நினைக்க முற்பட்டனர்" தேசீயம், பலாத்கார போக்கையே கொண்டதென கூற

வேண்டும். இவ்வித பலாத்காரப் போக்கே இன்று உலகில் நிலவிவரும் துக்ககரமான நிலைமைக்கு முற்றிலும் காரணமாகும். 13-டிச-1945-ம் பதிப்பில் இதை விவரிக்கையில் ஸ்டேட்ஸ்மன் கூறுவதாவது:—

பத்தொன்பதாம் நூற்றாண்டில் விஞ்ஞானம் அடைந்த சிறந்த வெற்றியின் உண்மைப்பலன் உலகத்திற்கு கிடைக்கவில்லை. அதன் சாதனங்கள் தேசியங்களிடையே தோன்றும் வேறுபாடுகளை வளர்க்க கையாளப்பட்டன. ஆகவே யுத்தவெறி தினசரி பயங்கர ரூபத்தை எடுக்கலாயிற்று. மனிதவர்க்கத்தின் சுதந்தரத்தை பாதுகாக்க தோன்றிய தேசீயம், ஒரு தேசம் மற்றென்றை அடிமைபடுத்தும் கருவியாக்கிவிட்டது. பொது ஜன சுயேச்சையை அடிப்படைக் கொள்கையாய்க் கொண்டு தோன்றிய தேசீயம் அக்கொள்கைக்கே வெடி வைத்துவிட்டது. மானிட வர்க்கத்திடையே இன்று காணப்படும் தவறுகளில் தேசீய உணர்ச்சியே முக்கியமானதாகும்” ஏகாதிபத்தியநாடுகளை விஸ்தரிக்கும் பேராசையே கடந்த ஒரு நூற்றாண்டில் நேரிட்ட யுத்தங்கள் அனைத்திற்கும் காரணம் என்பது நிச்சயம் முன்னேற்றமடையாத நாடுகள் தொழிற்துறையில் புரட்சியுண்டாக்காவிடில் தங்கள் சுதந்தரத்தை காப்பாற்றுவது துர்லபம். காலநிலையளிக்கும் சந்தர்ப்பங்கள் எத்தகைய சக்திவாய்ந்தவையாயினும் தொழிற்புரட்சி ஒன்றே சுதந்தரத்தைப் பாதுகாக்கும் சக்தி வாய்ந்தது என்பதில் ஐயமில்லை.

ஐரோப்பாவால் தோற்றப்பட்ட தேசியம் ஆசியாவில் தலை தூக்கிய பலனே சீனா ஜப்பான் முதலிய விடங்களில் மேற்கு-கிழக்குநாடுகளிடையே தோன்றிய வேறுபாட்டுக் கொள்கையே பிற்காலத்தில், மிஷன்கள். ஆசிரியர்கள் அரசியல் வாதிகள் என்றரூபத்தில் கிழக்கத்திய நாடுகளில் புகுந்தது. ஆரம்பத்தில் ஆசிய நாடுகள் அதை வரவேற்கவில்லை. சில விடங்களில் எதிர்ப்புமிருந்தது. காலத்தை அனுசரித்து நடக்கக்கூடியவராயினும் தீரம் மிக்கவரான கமோடோர் அட்மிரல் பேரியால் 1858-ல் விழிப்புற்ற ஜப்பான் 1868ல் ஐரோப்பிய நாடுகளைப் பின்பற்றி, மேற்கத்திய கொள்கைகள், அரசியல், பொருளாதார தந்திரங்கள் மேற்கொண்டுவிட்டது. பலாத்கார தேசியம் ஜப்பானில் ஏற்பட்டது அப்போக்கின் பலனே. முடிவில் சீன தற்காப்பு தேசியத்துடன் 1894ல் போர்புரிய நேரிட்டது. முதலிலிருந்தே பலாத்காரப் போக்கை மேற்கொள்ள ஜப்பான் தயாராயிருந்தது. ஆகவே முதல் மஹாயுத்தத்திற்கு முன்பே ஐரோப்பிய நாடுகளுடன் சம அந்தஸ்தில் யுத்தத்தில் கலக்க துடிதுடித்துக்கொண்டிருந்தது. மேற்கு நாடுகளோ சர்வதேசீ (Internati lism) யத்தை நோக்கி விரைந்து சென்றுகொண்டிருந்தன. தன் பண்டைய பெருமைகளைவிட மனமில்லாத சீன நாடு தற்காப்பை மேற்கொண்டு, உலக ஒற்றுமைக்கு பாடுபட்டு வந்தது. சீனா-ஜப்பானின் இவ்வித வேறுபாடுமிக்க போக்கு முழு காரணமாகிவிட்டது. சீனா ஜப்பானிடையே தோன்றிய வேறுபாட்டுக்கு, சீனாவின் பிற்போக்குத்தன்மையும் பொருளாதார சீர்கேடும் ஒருவகையில் காரணமாகும். இக்காரணத்தாலேயே ஜப்பானை எதிர்க்க சர்வதேச ஸ்தாபனங்களின் உதவியை நாடிவந்தது. இதற்கு நேர் எதிராக ஜப்பானியர் சர்வதேச நியதிகளை அந்நிய தலையீடென மதித்தது. ஆகவே 1931ல் மஞ்சூரியா மீது படையெடுத்த ஜப்பான் சர்வதேச சட்டங்களை ஏளனம் செய்தது. 1935ல் ஜெனிவா சர்வதேச சபையினின்றும் வெளியேறி சீன சமவெளிகள்மீது பயங்கர குண்டு வீச்சை நடத்தியது. தவிர 1935ல்—36ல் ஐரோப்பிய பலாத்கார தேசிய ஹிட்லர், முஸோலினிக்கு பூரண ஆதிரவளித்தது, சர்வாதிகார கும்பலுடன் சேர்ந்துகொண்டது. மஞ்சூரியா மீது ஜப்பான் படையெடுத்ததைக்கண்டு நடுங்கிய சீனா மேற்கத்தி நாடுகளை அண்டி உதவிக்கு மன்றாடியது. சர்வதேச நிலைமையினால் பயனடைந்த ஜப்பான், மஞ்சூரியாவைக் கைப்பற்றி ‘சுதந்தர மஞ்சுகோ’ நாட்டை ஸ்தாபித்தது. இச்சம்பவத்தால் சீனா விழிப்படைந்து சர்வதேச ஸ்தாபனங்களின் கையாலாகாத் தன்மையை உணர்ந்து தற்காப்புக்கு அந்நிய உதவி நாடுவதைவிட பலம் படைத்த தேசீயமே ஏற்றது என்பதை உணர்ந்துகொண்டது. சீனா-ஜப்பானிடையே ஏற்பட்ட வேற்றுமையால் மேற்கத்தி நாடுகளின் சுரண்டலுக்கு ஏற்ற சந்தர்ப்பம் கிடைத்துவந்தது. ஜப்பானை அவர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லையாயினும் சீனர்களை முழுதும் பாழாக்கிவிட்டனர். அம்மட்டுமல்ல ஏகாதிபத்திய பேய்ப்பிடியில் கிட்டத்தட்ட ஆசியா முழுதும் சிக்கிவிட்டது. மறுபுறம் ஐரோப்பிய நாடுகள் (பெயரளவில் ஜனநாயக நாடுகள்) பொருளாதாரத் துறையில் உச்சநிலையையடைந்து, சரிந்து கீழ்நோக்கி விரையலாயின. கடந்த நூற்றாண்டில் ஐரோப்பா, ஆசிய இரத்தத்தை நன்கு குடித்து வந்தது. ஆசியர்களின் வாழ்க்கை வெறும் தொல்லைகளும் துன்பங்களும் கலந்து மிகமோசமாயிருந்தது. காலத்தின் பயங்கர அவநம்பிக்கை மிகுந்த போக்கில் தேசிய எழுச்சியே நம்பிக்கை ஒளி விசக்கூடியது. பண்டித நேரு கூறியது போல் ஆசிய மக்களின் மனப்போக்கை அறிய ஐரோப்பா என்றும் முயலவில்லை. ஆசிய தேசீய இயக்கங்களை என்றும் வெறுத்து பலாத்காரமாய் அவற்றை அடக்க முயன்று வந்தது. 1917ல் ரஷ்ய புரட்சியால் கம்யூனிஸம் (பொதுவுடமை) ஓங்கவாரம்பித்தது. பழைய ஆட்சிமுறையின் தவறுகளுக்காளாகி, பசி, வறுமை முதலிய துன்பங்களால் பீடிக்கப்பட்டு குற்றுயிராய்க்கிடந்த ஆசியமக்கள் அதை வரவேற்றனர். முதலாளிகளின் பசப்பலை சகிக்க ஏழை மக்களுக்கு சக்தியிருக்கவில்லை. அந்நியரை எதிர்த்து போராடிவந்த தேசீய சக்திகள் பொதுவுடைமைக் கொள்கையால் பெரும் அளவு பலம் பெற்றுவிட்டன. ஆகவே தான் 1920க்குப்பின் தேசீய சக்திகளுடன் ஒற்றுமையாய் நின்று கம்யூனிஸ்டு ஸ்தாபனங்கள் ஆசிய நாடுகள் அனைத்திலும் அந்நிய

ஏகாதிபத்தியங்களை எதிர்த்துப் போராடிவந்தன. இரண்டாம் உலகயுத்தத்தில் ஏகாதிபத்திய நாடுகள் பரஸ்பர சண்டை செய்து குற்றுயிராகிவிட்டன. ஆகவே ஆசிய தேசீய எழுச்சியை அடக்கும் சக்தியற்றுவிட்டன. மேலும் கடந்த இருபது ஆண்டுகளாய் முதலாளிகளுக்கும், ஏழைகளுக்கும் நடைபெற்றுவந்த போராட்டத்தால் பொதுவுடைமைக் கொள்கைகள் மிக பலம் பெற்றுவிட்டதாகையால் ஆசிய நாடுகளினின்றும் தாங்கள் மரியாதையாய் வெளியேறிவிடுவதே நல்லதென்பதை ஏகாதிபத்தியங்கள் உணர்ந்துவிட்டன. பிற்பட்ட தேசத்தினரின் அவலநிலைமையில் ஏகாதிபத்திய நாடுகள் என்றும் அநுதாபம் கொண்டதேயில்லை. "ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் கம்யூனிஸத்தை முறியடிக்க முதற் காரியமாய் நாங்கள் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை முதலிய நாடுகளுக்கு சுதந்தரமளித்துவிட்டோம்—பொதுவுடைமைத் தாக்குதலை இந்தியா—இலங்கைக்கு விடுதலையளித்து எதிர்நடவடிக்கை எடுத்துள்ளோம்" என்று அட்லி பெருமையுடன் செப். 5உ கூறினர்.

அட்லியின்கூற்று எவ்வளவு சூது நிறைந்ததாகும் என்பதை நாம் அறிவோம். தேசீய எழுச்சியை பூதாகார பலாத்கார சக்திகளால் அழிக்கமுடியுமா? இந்தியாவும், இந்தோனேஷ்யாவும் இதற்கு எடுத்துக்காட்டாகும். மலேயா, இந்தோசீனாவிலும் மேற்கத்தி ஏகாதிபத்தியங்கள் இவ்வுண்மையை உணர்ந்துவிட்டால்! அந்நாடுகளில், வகுப்புவாதம், இனவேறுபாடு, கலாச்சார வேறுபாடுபோன்ற விஷவித்துக்களை விதைத்து பொதுவுடைமைக்குச் சக்தி ஊட்டாமல் இருந்தால்—? சியாங்கே ஷேக் போன்ற தேசத்துரோகியை அமெரிக்கா உதவியிருக்காவிடில் சீனாவில் கம்யூனிஸ்டுகளுக்கு இம்மாபெரும் வெற்றி கிடைத்திருக்காது என்பது திண்ணம். யுத்தம் முடிவடைந்ததும் சீன மக்கள் சியாங்கை பரம வைரியாய் கருதியிருக்கமாட்டார்கள். ஏனெனில் தங்கள் விவகாரங்களில் அந்நியர் தலையீட்டை ஆசியமக்கள் வெறுப்பதைவிட சீனமக்கள் குறைந்த அளவு வெறுப்பவர்களல்ல.

சரித்திரம் கற்பித்த இப்பாடத்தை மேற்கத்தி நாடுகள் என்றும் மறக்கமுடியாது. பொதுவுடைமை பீகிங், கல்கத்தாவழியாய் மேற்கு ஐரோப்பா, அமெரிக்கா முதலியவிடங்களில் பரவும் என்று ஒரு சமயம் லெனின் கூறியுள்ளார். நடந்த சில ஆண்டுகளில் கம்யூனிஸம் அடைந்த வெற்றிகள் லெனின் கூற்று முற்றிலும் உண்மை என்பதையும் சர்வதேச அரசியல் ஐரோப்பாவை விட்டு ஆசியாவில் குடிபுகுந்துவிட்டதென்றும் ஏகாதிபத்திய நாடுகளுக்கு உணர்த்திவிட்டன. இன்று ஆசியா விழிப்புற்றுவிட்டது. மக்கள் உணர்ச்சி மிகுந்துவிட்டனர். மற்றவரைப்போல் தலைநிமிர்ந்து வாழ அவர்கள் கங்கணம் கட்டியுள்ளனர். இப்பரந்த கண்டம் ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் சுரண்டலுக்குட்பட்டிருப்பதை அவர்கள் இனி சகிக்கமாட்டார்கள். 'ஆசியா அன்ன நடையை விரும்பவில்லை. அது விரைந்து செல்ல விரும்புகிறது." என்று பசிபிக் உறவு மகாநாட்டில் அக். 3உ பண்டித நேரு கூறியது முற்றிலும் உண்மையாகும். குறிப்பிட்ட சில திட்டங்கள் ஆசியாவின் பேராவலை தணிக்கக்கூடியவையல்ல. ஆசிய தேசீய உணர்ச்சிக்கு தக்கமதிப்பளித்து, ஆசியர்கள் முன்னேற்றமடைய அவர்களுக்கு பூரண சுதந்திரம் அளிக்கவேண்டும். இத்தகைய முறையே ஏகாதிபத்தியங்களுக்கு நன்மை பயக்கக்கூடியது. சீனாவில் கம்யூனிஸம் அடைந்த வெற்றி இங்கிலாந்தையும் அமெரிக்காவையும் பீதியடையச் செய்துவிட்டதென்பது உண்மையே. ஆனால் ஆசிய நாடுகளில் பீதியிருப்பதாகவோ அல்லது அதைப்பொருட்படுத்துவதாகவோ தோன்றவில்லை என்பதை அட்லியும் ட்ரூமனும் அறிந்துசொண்டால் நல்லது. சீனாவில் செய்த அதே தவறை மற்ற ஆசிய நாடுகளிலும் அவர்கள் செய்தால் ஆசியாவில் கம்யூனிஸம் அடையும் வெற்றிக்கு முழுப் பொறுப்பும் அவர்களுக்கே சேரும் என்பதையும் அவர்கள் அறியவேண்டும்.

விமர்சனம்.

அவ்லியாக்களை அவமதிக்காதீர்.

(ஆசிரியர். A. M. யூசுப்)

காரைக்கால் வளர்பிறை பதிப்பகத்தார் வெளியிட்டுள்ள ஆசிரியர். A. M **யூசுப்** அவர்கள் தீட்டிய "அவ்லியாக்களை அவமதிக்காதீர்" என்ற பிரசுரம் ஒவ்வொரு முஸ்லிமும் படித்து, தன் குடும்பத்தாரையும் எடுத்தோதி நற் பலனடையத்தக்கதாகும். இறைவனின் ஏகத் தன்மையை எடுத்தோதும் குரானிய வசனங்களும், நபிநாயக திருவாக்குகளும் அனேகமிருப்பினும், இச்சிறிய பிரசுரத்தில் கூறப்பட்டவை சுருக்கமாயும், தெளிவாயும் விளக்கப்பட்டுள்ளன. பாஷை நடை சிறந்ததாயும் தெளிவாயும் அமைந்துள்ளது.

தமிழ் நாட்டிலுள்ள இஸ்லாமிய கழகங்கள் இப்பிரசுரத்தின் பிரதிகள் பலவற்றை வரவழைத்து, முஸ்லிம் ஆண் பெண்களுக்கு இலவசமாய் வினியோகித்து நற் பயனடையவேண்டும் என்று கோருகிறோம்.

ஆசிரியர்,

மறவோம் மஹாத்மாஜீ!

அஞ்சலிப்பா பஞ்சகம்.

(ஷேக்பீர்., கல்லிடைக்குறிச்சி)

(1) அணுகுண்டு சகாப்தமது ஆரம் பிக்க
அதனின்றும் உய்வதற்கு அவனி மக்கள்
அணுவுக்குள் அணுவான அரூபி யான
ஆண்டவன் தான் அருள் கொண்டு அஹிம்சை யென்னும்
அணுகலரும் அன்புடனே அண்பி வந்து
அளவளாவ வைக்குமுயர் ஆயு தத்தை
அணுதவறு முறைகொள்ள அறிஞ னென்று
அண்ணலெந்தை காந்தியை அனுப்பி னானே!

(2) இந்தியாவில் வாணிபத்தை எண்ணி வந்து
இங்கிருந்த செல்வங்கள் இச்சை கொண்டு
இந்தியாவின் கோக்கனுடன் இசைந்தே மாற்றி
எதிர்ப்புகளை அவர்களுக்குள் இயக்கி வென்று
இந்தியாவைக் கவர்ந்தாண்ட இங்லீ ஷாரை
இவணின்றும் வெளியேற்றி இணக்க மாக
இந்தியாவின் சுதந்திரத்தை ஈட்டு தற்கோ
இறைவனுனை ஈண்டளித்தான்! எம்மான் காந்தி

(3) உண்மையன்பு உயர்வொழுக்கம் உறவாய்க் கொண்டு
உறுதியுடன் இந்தியர்பால் உணர்ச்சி யூட்டி
வன்மையாக உயர்வுதாழ்வு வகுப்பு பேத
வம்பழித்து வகையாக வ ப்ப டுத்தி
கண்மணியாம் சுதந்திரத்தை காண்ப தற்கு
கடுமடக்கு முறைகளிலும் கலங்கி டாது
தண்மையுடன் அஹிம்சைகொண்டு தான்போ ராடி
தரணியெலம் வியக்கவெற்றி தந்தா யேநீ!

(4) ஆயுதத்தால் தந்திரத்தால் அடக்கி யாண்ட
ஆங்கிலேயர் ஆட்சிதனை அஹிம்சை யென்னும்
ஆயுதத்தால் வீழ்த்தியதால் அகிலத் தோர்க்கு
அரும்பெருமைப் படைகளானும் அஹிம்சை யாலே
சாயுமென்று காட்டி, இங்கு சக்தி மிக்க
சகல சுக விடுதலையும் தந்து விட்டு
நீயுமிவண் வந்தவேலை தீர்ந்த தென்று
நிலமனிடம் ஏகினையே? நிலைமை யாதோ!

(5) இந்தியாவின் ஜோதியாக இலங்கி நின்று
இப்புவியி லெங்குமேநீ இருள்க ளைந்தாய்!
இந்தியரை இமையன்ன இன்னல் காத்து
இணையிலா உயர்நிலையை ஈந்து நின்றாய்!
இந்தியரை ஏங்கவிட்டு இ க்க மின்றி
ஏகிமூன்று ஆண்டுகளாய் இருக்கின் றாயே!
இந்தியர்கள் உனை இதய திருத்தி ஏத்தி
என்றுமுன்போல் வழியொழுகி இன்பம் காண்போம்!

செய்திகள்.

மேலப்பாளையம் பெரியதெரு, குருபரன் & கோ.. (ஜமக்காள உற்பத்தியாளர்கள்) சார்பில் 22—2—51, தேதி இரவு நெல்லைச்செய்தி அசிரியரும், மாகாண காங்கிரஸ்கமிட்டி மெம்பருமான ஸ்ரீமான் S. N ஸோம யாஜுலு அவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கீழ்கண்ட தீர்மானங்கள் பொது மக்களால் வகயனதாக நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்கள்.

(1) மேலப்பாளையத்தில் சுமார் 160 ஜமுக்காளத் தரிகளும், 40-பெட்ஷீட் தரிகளும் இருக்கின்றன. ஷை தரிகளுக்கு தற்பொழுது தரி ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 2s நூல் 1-கட்டு வீதம் கொடுக்கப்படுகிறது. மாதம் ஒன்றுக்கு 1-கட்டுவீதம் கொடுக்கும் ஷை நூல் ஜமுக்காள்ம், பெட்ஷீட் முதலியன நெசவு செய்யும் தரிகாரர்களுக்கு 1-நாளைக்கு ஊடை நெசவுக்குத்தான் போதுமானதாக இருக்கிறது. பாவுக்கு நூல் கொடுக்கப்படவில்லை. தற்பொழுது ஷை ஜமுக்காளத்தரி நெசவாளர்களுக்கு போதுமான நூல் கிடைக்காததினுல் ஷை தொழில் மிகவும் பாதிக்கப்பட்டு, நசித்துப்போய் ஏழை ஜமுக்காள & பெட்ஷீட் நெசவாளிகள் மிகுந்த பஞ்சத்திற்கு ஆளாகிவிட்டார்கள். மேலும் ஷை தொழில் க்ஷீண திசை அடையாமல் சரிவர நடத்திவரவும் பஞ்சப்பிணியிலிருந்து ஷை ஏழை நெசவாளர்களை காப்பாற்றவும் தரி ஒன்றுக்கு 2s நூல் ஊடை நெசவிற்காக 15-கட்டுகளும், பாவுக்கு 20s நூல் 3 கட்டுகளும். கொடுத்தால் தான் ஷை ஜமுக்காள நெசவாளிகளுக்கு அரைவயிறு உணவாவது கிடைக்கும். தொழிலும் பாதிக்கப்படாமலிருக்கும். பெட் ஷீட் தரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு தரி ஒன்றுக்கு ஊடை நெசவுக்கு 2s நூல் 15-கட்டுகளும், 2/20s முறுக்கு நூல் 3-கட்டுகள் வீதமும் கொடுத்தால்தான் ஷை தொழிலும் பாதிக்கப்படாமலிருக்கும். ஆகையால் காருண்ய கவர்மெண்டார் அவர்களை ஷை தொழில் க்ஷீணதசையை அடையாமல் சரிவர நடத்திவரவும், நெசவாளர்களின் பஞ்சநிலையை போக்கவும், தீர்மானத்தின் வேண்டுதலின்படி நூல் கிடைக்கவும் வேண்டிய முயற்சிகள் செய்து ஆவன செய்யுமாறு இக்கூட்டம் வற்புறுத்தி கேட்டுக்கொள்வதுடன் இந்நகர் நெசவாளிகளுக்கு சரிவர நூல்சப்ளை கிடைக்கும்வசை முன் பஞ்சப்படி கொடுத்துவந்ததுபோல தற்போதும் நெசவாளிகளின் கஷ்டம் தீர வாரம் ஒன்றுக்கு குடும்பம் ஒன்றுக்கு பஞ்சப்படி ரூபாய் 3-8-0 வீதம் கொடுத்து வரும்படியும் கவர்மெண்டாரை இக்கூட்டம் வேண்டிக் கொள்கிறது.

(2) மேலப்பாளையத்தில் சுமார் 7000-தரிகளுக்குமேல் இருக்கிறது. ஷை தரிகளுக்கு தற்போது போதிய நூல் கிடைக்காமல் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகி பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். தற்பொழுது ஷை நெசவாளிகளுக்கு மாதம் ஒன்றுக்கு தரி ஒன்றுக்கு ½-கட்டு நூல்வீதம் தான் கிடைக்கிறது அதுவும் சரிவர கிடைக்காமல் மேலும், மேலும் ஷை நெசவாளிகள் மிகுந்த க்ஷீண தசையை அடைந்து கொண்டிருக்கின்றன. ஆகையால் மாதம் ஒன்றுக்கு ஷை ஏழை நெசவாளில்ளுக்கு தரி ஒன்றுக்கு 4½-கட்டு நூல் வீதம் கிடைக்கவும், பஞ்சப் பிணியிலிருந்து காப்பாற்ற பஞ்ச நிவாரணமாக நடவடிக்கை எடுக்கும்படி காருண்ய தேசீய சர்க்காரை இக்கூட்டம்மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறது.

(3) இந்நகரிலிருக்கும் கீழ வீரராகவபுரம் மேலப்பாளையம் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் 1250 ஏழை நெசவாளிகள் நெசவு செய்துகொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு தற்போது கஷ்ட நிவாரண திட்டத்தில் மாதம் ஒன்றுக்கு தரி ஒன்றுக்கு 2¼கட்டு நூல் வீதமும், களி ஒன்றுக்கு 0–6–0 அணு கூலி வீகிதமும் தான் கொடுத்துவருகிறூர்கள். ஷை நெசவாளர்களுக்கு களி ஒன்றுக்கு 0–10–0 அணு கூலி விகிதமும், மாதம் ஒன்றுக்கு 4½-கட்டு நூல் விகிதமும் கொடுக்க இக்கூட்டம் கேட்டுக்கொள்வதோடு, இந்நகரிலுள்ள கொடிய பஞ்சம் இன்னும் நீங்காததால், இன்னும் 2-மாதங்களில் முடிவடைகிற கஷ்டநிவாரண திட்டத்தை மேற்தொண்டு வருகிற ஏப்ரல் மாதம் 6-மாத காலங்களாவது நீடித்து கொடுக்கும்படி சுதந்திர சர்க்காரையும், கூட்டுறவு சங்கங்களையும, கனம். D. R. O. (திருநெல்வேலி) அவர்களையும் இக்கூட்டம் மிகவும் வேண்டிக்கொள்கிறது

(4) தாம்பிரபரணி நதியில் கருப்பந்துறைக்கும் மேல நத்தத்திற்கும் குறுக்கே வாஹனங்கள், பொது ஜனங்கள், போக்குவரத்து சாதனங்களின் சௌகரியத்திற்காக ஒரு பாலம் அவசியம் கட்டித்தரும்படி இக்கூட்டம் தேசிய சர்க்காரை கேட்டுக்கொள்கிறது.

P. S. பக்கீர் முஹம்மது தரகனர்.
23—1—51.

* * *

பாகிஸ்தான் சென்ற முஸ்லிம்கள் திரும்புகின்றனர்.

லாஹூர் 16. பிப்:— இன்று இங்கிருந்து 1500-முஸ்லிம் அகதிகள் இந்தியா திரும்பிச்சென்றனர். அவர்கள் கடந்த வகுப்புக் கலவரங்களில் இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் வந்தவர்களாவர்.

நேரு-லியாகத் ஒப்பந்தத்தின்படி இந்திய சர்க்கார் பத்தாயிரம் (10000) முஸ்லிம்களை பாகிஸ்தானிலிருந்து திரும்ப வரவழைத்து இந்தியாவில் குடியேற்றும் என்ற ஷரத்தின்படியே இம்முஸ்லிம்கள் திரும்பிச் செல்கின்றனர். இவர்களில் 5000 பேர் கடந்த மாதமேஇந்தியா வந்தடைந்துவிட்டனர்.

வரும் பிப்-26 மார்ச் 17 தேதிகளில் மேலும் 1000 1500 பேர்கொண்ட இரு அகதி கோஷ்டிகள் இந்தியா புறப்பட்டுச்செல்லும்.

* * *

23-1-51 மாலை 5 மணிக்கு, மேலப்பாளையம் முனிஸிபல் ஆஸ்பத்திரியில் சென்னை சட்டசபைத் தலைவர், கனம் J. சிவசண்முகம் பிள்ளை M A., அவர்களுக்கு "மேலப்பாளையம் நகரசபை" சேர்மன், ஜனாப் V.S.T. முஹம்மது இபுராகிம் அவர்களால் "நகர சபை" சார்பில் ஓர் வரவேற்புறை வாசித்தளிக்கப்பட்டது. மேலப்பாளையம் "நகர காங்கிரஸ் கமிட்டி" சார்பில் அதன் தலைவர், ஆலி ஜனாம் V.S.T. சேக் மன்சூர்சாகிபு மாஜி M.L.A. அவர்களாலும் ஓர் வரவேற்புரை வாசித்தளிக்கப்பட்டது.

முனிஸிபல் ஆஸபத்திரிக்கு சேர்மன் ஜனாப் V.S. T முஹம்மது இபுராகிம் அவர்களால் நன்கொடை அளிக்கப்பட்ட மகாத்மா காந்திஜியின் முழு உருவப் படத்தை சேர்மன் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, கனம் சபாநாயகர் அவர்கள் திறந்துவைத்தார்

ஷை வரவேற்புரைகளுக்கு கனம் சபாநாயகர்பதில் அளிக்கும்போது! மேலப்பாளையத்து ம்க்களுக்கு தாராளமாக நூல் சப்ளை கிடைக்கும்படி தான் ஏற்பாடு செய்வதாகவும், கோவாப்ரேட்டிவ்சொசைட்டிகள்மூலம் பஞ்சநிவாரணத் திட்டத்துக்கு ஏப்ரல் மாதமுதல் ஆறு மாதத்திற்கு (ரிலீப் ஸ்கீமை) நீடித்துக் கொடுக்கவும், ஷை சொஸைட்டிகளில் நெய்துவரும் தறி நாரர்களுக்கு அதிகமான நூல் கிடைக்கவும், கூலியை கூடுதலாக கொடுக்கும்படியும் தன்னால் இயன்றவாறு அவசியம் முயற்சித்து ஆவன செய்வதாகவும் கூறினார்கள். சேர்மன் அவர்களால் நன்றிகூற கூட்டம் இனிது கலைந்தது.

இங்ஙனம்.

24—1—51. யூசுபு

* * *

மேலப்பாளையம் நகர காங்கிரஸ் கமிட்டியின் நிர்வாகக்கூட்டம் 21-1-51 தேதி இரவு 8-30மணிக்கு தலைவர், ஜனாப் V. S. T. ஷேக்மன்சூர் Ex. M. L. A. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன

தீர்மானங்கள்.

1. தற்பொழுது இருக்கும் நூல் நெருக்கடியின் காரணமாக நமது நகரில் சுமார் 8000க்கு மேற்பட்ட நெசவாளர்கள் வரை பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களில் சொந்தத்தில் நெய்து வருபவர்கள் சுமார் 7000 பேர்கள் இவர்களுக்கு தற்பொழுது மாதம் 1-க்கு ½ கட்டு நூல் கூட சரிவரக் கொடுக்கப்படவில்லை. ஷை நூலை வைத்துக்கொண்டு தொழில் செய்து ஜீவனோபாயம் செய்வது மிகவும் க்ஷீண திசை அடைந்துகொண்டே வருகிறது. மேலும் இந்நிலைமை நீடித்தால், ஏழை நெசவாளர்கள் மிகவும் பரிதாபகரமான நிலைமைக்கு ஆளாகிவிடுவார்கள். ஆகையால் ஷை 7000 நெசவாளர்களுக்கும் மாதம் 1-க்கு 4½ கட்டுகள் நூலும், முடியாவிட்டால் முன்பு கொடுத்ததுபோல வாரம் 1-க்கு குடும்பம் 1க்கு ரூ. 2-8-0, 3-8-0 வீதம் பஞ்ச நிவாரண அலவன்ஸ் கொடுக்க காலதாமதமில்லாமல் ஏற்பாடு செய்யும்படி, கனம் ஜில்லா கலெக்டர் அவர்களையும், மாகாண சர்க்காரையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கேட்டுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இந்நகரில் இருக்கும் கீழவீரவராகவபுரம் மேலப்பாளையம் நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் மூலம் சுமார் 1250 தறிகள் வரை நெசவு செய்துகொண்டிருக்கின்றன. ஷை நெசவாளர்களுக்கு கஷ்ட நிவாரண திட்டத்தில் (Relief Scheme) தற்பொழுது மாதம் 1க்கு 2¼ கட்டு நூலும் களி 1க்கு 6 அணா கூலியும் கொடுக்கிறார்கள். ஷை Relief Scheme மும் இன்னும் இரண்டு மாதங்களுக்குத்தான் இருக்கிறது என்பதை எண்ணும்போது, நகரில் இருக்கும் பஞ்சப்பிணியை உத்தேசித்து நாங்கள் மிகவும் அஞ்சுவதுடன், ஷை கஷ்ட நிவாரண திட்டத்தை இன்னும் ஆறு மாதகாலம் நீடிக்கச் செய்து, ஷை கூட்டுறவு சங்கங்களின் மூலம், மாதம் 1க்கு 4½ கட்டு நூல்கள் தறி 1க்கு கொடுக்கவும் களி 1க்கு 10 அணா வீதம் கூலிகொடுக்க ஏற்பாடு செய்ய, கனம் ஜில்லா கலெக்டர் அவர்களையும் மாகாண சர்க்காரையும் கேட்டுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

2 26-1-51ந்தேதி காலையில் நகரின் முக்கியமான இடங்களில், தேசிய கொடிகள் ஏற்றவும், மாலையில் கமிட்டியின் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடத்தவும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

3 30-1-51ம் தேதியில் நகரின் முக்கியமான இடங்களில் பறக்கும் கொடிகளை இறக்கி மரியாதை செலுத்தவும், ஓர் மௌன ஊர்வலம் நடத்தவும், ஏழைகளுக்கு கஞ்சி காய்ச்சி ஊத்தவும் கமிட்டி ஆபீஸில் நூல் நூற்கவும், மாலையில் ஓர் பொதுக்கூட்டம் நடத்தவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

4. சென்னை சட்டசபை சபாநாயகர் திரு ஜே. சிவஷண்முகம் பிள்ளை அவர்களுக்கு 23-1-51ம் தேதி மாலை நகரசபை ஆஸ்பத்திரியில் ஓர் வரவேற்

புரை வாசித்தளிக்கவும், வரவேற்புரை தயார் செய்யவும் கமிட்டி தலைவர் அவர்களைக் கேட்டுக்கொண்டும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

5. நம் நகரில் ஹிந்துமுஸ்லீம் ஐக்கியத்தை வளர்க்க, அவ்வப்போது பொதுக்கூட்டங்கள் கூட்டி பிரச்சாரம் செய்ய ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

நிலச்சுவானதார்கள் கடமை

தஞ்சை ஜில்லா தம்பிக்கோட்டை தாலுக்காவிலும் குருவாடியிலும் சில மிராஸ்தார்கள் நவீன முறையில் உற்பத்தி செய்து ஏகர் ஒன்றுக்கு 140 கலம் நெல் கண்டுமுதல் செய்துள்ளனர். தென்னிந்தியாவில் சிற்சில பிரதேசங்கள் தவிர மற்றவிடங்களில் நல்ல பூசாரம் உண்டு என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். ஏற்ற முறையில் உற்பத்தி செய்தால் நூற்றுக்கு நூறு பலனடைய முடியும். தற்சமயம் நம் நாட்டில் ஏற்பட்டுள்ள உணவு பற்றுக்குறை பத்து சதமே. தஞ்சை மிராசுதார்கள் காட்டிய உதாரணத்தை இந்திய விவசாயிகள் பலரும் பின்பற்றினால் பற்றுக்குறை என்பது கனவிலும் கருதாத விஷயமாகிவிடும் என்பது நிச்சயம் நம் அரசாங்கம் நாட்டுமக்களை உணவு பஞ்சத்தின் பயங்கரவிளைவினின்றும் காப்பாற்ற கோடிக்கணக்கில் செலவிடுகிறது. விவசாயிகள் ஊக்கத்துடன் முனைந்தால் அப்பெருந்தொகையை வேறு ஆக்க வேலையில் ஈடுபடுத்தி நாட்டை முன்னேற்ற உதவலாம்.

அதிக கண்டுமுதல் செய்து நாட்டு மக்களுக்கு உதாரணம் காட்டிய மிராசுதார்கள் பல வேலி நிலம் கொண்டவர்களாயினும் சில செண்டு நிலத்தில் மட்டும் தீவிர உற்பத்தியை மேற்கொண்டு, அதிக உற்பத்தி செய்துவிட்டதாய் தம்பட்டமடிப்பது கண்டு வருந்தாதார் எவருமிருக்கமாட்டார். உண்மையில் தேசத்திற்கு உதவவும் பஞ்சத்தின் கோர விளைவுகளினின்றும் சகதேச சகோதரர்களை காப்பாற்றி பேருபகாரம் செய்ய அவர்கள் விரும்புகிறார்களெனின், சில செண்டுகளன்றி தமக்குச் சொந்தமான நிலங்கள் அனைத்திலும் நவீன முறையில் அதிக உற்பத்தி செய்வார்களாயின், நிச்சயம் பாராட்டுதலுக்கு உரியவர்களே. தேச மக்களும் அவர்களிடம் நன்றியுடையவர்களாயிருப்பர். நிலச்சுவான்தார்கள் தமக்கு சொந்தமான நிலமனைத்தையும் நவீன முறையில் உற்பத்தி செய்ய சர்க்காரும் ஊக்கமளிக்க வேண்டியதவசியம்.

ஆசிரியர்.

கொளும்பு திட்டம்

தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகள் வறுமைக்கு பரிகாரமா?

தெற்கு, தென்கிழக்கு நாடுகளின் விடுதலை இருபதாம் நூற்றாண்டின் அதிமுக்கிய சம்பவமாகும். அதற்காக சகோதரத்துவம், சமத்துவம், சுதந்தரம் என்று கோஷித்தவாறு எந்த பாய்ரனும் மேற்கிலிருந்து வரவில்லை. 1830-ம் ஆண்டு கிரேக்க விடுதலைப்போர், பிரெஞ்சு புரட்சியினால் தோற்றுவிக்கப்பட்டது. ஆனால் இன்று ஆசிய நாடுகளின் விடுதலை ரஷ்யப் புரட்சியின் பலனே. சில நாட்களுக்கு முன் பிரிட்டிஷ் பிரதமர் மிஸ்டர் அட்லி "ஆசிய நாடுகளில் கம்யூனிஸ்டுகளின் நோக்கம்" என்ற விஷயமாய் பேசுகையில் கூறியவை மேற்கூறியதற்கு அத்தாட்சி எனலாம். ஆசிய நாடுகளில் கம்யூனிஸ்டுகளின் கொட்டத்தை அடக்கும் முயற்சியின் முதல் காரணமாக நாம் பர்மா, இந்தியா, இலங்கை முதலிய நாடுகளுக்கு சுதந்தரம் அளித்துள்ளோம்" என்று அவர் கூறியிருக்கிறார். 1917-ம் ஆண்டு போல்ஷிவிக் புரட்சி ஏற்படுத்திய அரசியல், பொருளாதார, கலாச்சார மாறுதல்களின் பயனே மேற்கூறிய நாடுகளின் விடுதலைக்கு முக்கிய காரணம் என்பதை எவரும் மறுக்கமுடியாது. அவை சுயராஜ்யத்தை அடைந்துவிட்டனவாயினும் ஏழ்மையால் வாடிக்கொண்டிருக்கின்றன. பல்லாண்டுவரை அடிமைப் பட்டிருந்தமையால் பொருளாதாரத்துறையில் சீர்கேடான நிலைமையிலுள்ளன, பொதுமக்களோ ஆத்மீக, பொருளாதார ஆக்கத்திற்கு அறவே ஆர்வமில்லாது கிடக்கின்றனர். பட்டினி, நோய் முதலியவை அவர்களின் தினசரி வாழ்க்கையின் முக்கிய அம்சங்களாகிவிட்டன. மொத்தத்தில் கம்யூனிஸம் வளர்ச்சியடைவதற்கு ஏற்ற காரணங்கள் பலவும் இருந்தன. "கம்யூனிஸம் பீகிங், கல்கத்தா வழியாக ஐரோப்பா போய்ச்சேரும்" என்று லெனின் கூறியதற்கு முக்கிய காரணங்கள் பலவும் சாம்ராஜ்ய திட்ட ஆட்சியில் நிறையவிருந்தன. "ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகள் நிச்சயம் தோல்வியடையும், கம்யூனிஸம் வெற்றியடையும் ஆனால் நைன், சீன பள்ளத்தாக்குகளிலல்ல. மலேயா நாடுகளில் இந்திய நெல் வயல்களில், கங்கா, ஜம்னா சமவெளியில்" என்பதே லெனின் கூற்றின் கருத்தாகும்.

வருங்காலத்தில் ஏற்படப்போகும தோல்வியின் பீதி ஐரோப்பிய நாடுகள் யாவற்றையும் பீதியிலாழ்த்தியுள்ளது. ஏனெனில் ஐரோப்பிய அரசியல் இயந்திரத்தை சக்தி ஊட்டும் பொருள்களை ஆசியநாடுகளே அளித்துவந்தன. ஆனால் தனிப்பட்ட மனிதர் முதல் சமுதாயங்கள்வரை, சாகக்கூடியவன் பெருமுயற்சி செய்வதும், அணையும் விளக்கே அதிகம் பிரகாசிக்க முயல்வதையும் யாவருமறிவர்.

கொழும்பு திட்டம்

கொழும்பு திட்டட் உண்மையில் அணைந்து போகும் விளக்கின் கடைசி ஒளியே என்று கூறலாம். தெற்கு, தென்கிழக்கு நாடுகளை, "உள்நாடு, வெளிநாடு" ஆகிய இரு நிலையிலும் வலுவடையச் செய்து, பொருளாதாரத்தில் முன்னேற்றி பெருகிவரும் பொதுவுடைமை பிரளயத்தை எதிர்க்கும் அளவுக்கு கொணர்வதே கொழும்புத்திட்டத்தின் முக்கிய நோக்கம். தெற்கு, தென்கிழக்கு ஆசியாவில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், மலேய சமஷ்டி, சிங்கப்பூர், வடபோர்னியோ, பரோனி, ஸாராவாக் முதலிய பிரதேசங்கள் உள்ளன. சிட்னி கூட்டத்தின்போது, காமன்வெல்த் அல்லாத மற்ற நாடுகளையும் சேர்க்க முயற்சி செய்யப்பட்டது. ஆனால் அவை சேர மறுததுவிட்டன. கொழும்பு, லண்டன் கூட்டங்களில், இந்தோனேஷியா, தாய்லாந்து, இந்தோசீனா முதலிய நாட்டு பார்வையாளர் கலந்துகொண்டனராயினும், மஹாநாட்டின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ளவுமில்லை. திட்டத்தின் எல்லைக்குட்படவுமில்லை.

கொழும்புத் திட்டம், முன்னேற்றத்திற்குரிய ஆறு ஆண்டு திட்டமாகும். கீழ்குறித்த மூன்று முக்கிய அம்சங்கள் அதில் காணப்படுகின்றன. ( ) ஆற்றுப்பாய்ச்சல் சாகுபடி நிலங்களை 17 சத விகிதம் அதிகரிப்பது. (2) தானிய உற்பத்தியை 19 சதம் அதிகரிப்பது. (3) மின்சார உற்பத்தியை 67 சத வீதம் பெருக்குவது. இத்திட்டங்களை நிறைவேற்றி வைக்க 1868 மில்லியன் பவுன் செலவழிக்கத் தீர்மானிக்கப்பட்டது. (1868 மில்லியன் சுமார் 200 கோடி ரூபாயாகும். போக்குவரத்து சாதனங்களை விருத்தி செய்வதற்காகவே அதிக தொகை செலவழிககப்படும். சாகுபடி சாதனங்களை அடுத்த ஸ்தானத்திலும் தொழில் துறை கடைசி ஸ்தானத்திலும் உள்ளன. இத்துறையில் உதவியளிக்க நிபுணர் கமிட்டியொன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. அதன் தலைமைக் காரியாலயம் கொழும்பிலிருக்கும்.

ஏட்டளவில் பல திட்டங்கள் தயாராயிருக்கின்றன. ஆகவே கொழும்பு திட்டத்தின்கதி என்னவாகப் போகிறதென்பதை கவனிக்கவேண்டும். அதற்கு பதில் மூன்று முக்கிய விஷயங்கள் அளிக்கக்கூடும் என்று எகானமிஸ்டு என்னும் பிரிட்டிஷ் பத்திரிகை கூறுகிறது. அதாவது:— "ஆசிய மக்களை முன்னேற்ற தீர்மானிக்கப்பட்ட இத் திட்டத்தை அவர்கள் எவ்விதம்வரவேற்கிறார்கள் என்பதும்; அதை நிறைவேற்றிவைக்க அமெரிக்காவும் பிரிட்டனும் எவ்வளவு நிதி உதவி செய்வர் என்பதும்; முடிவாக ஆசிய நாடுகள், ஏகாதிபத்திய முதலாளிகளின் சுயநல வேட்டையாடும் நாடுகள் என்று கம்யூனிஸ்டுகள் செய்துவரும் பிரச்சாரத்திற்கு பதிலளிக்கும் வகையில் கொழும்பு திட்டத்தை எவ்விதம் பிரச்சாரம் செய்கிறார்கள் என்பதுமே அத்திட்டம் நிறைவேற்றப்படும் விதத்தை எடுத்துக் காட்டக் கூடியவை.

ஆசியநாடு அத்திட்டத்தை வரவேற்குமா? என்ற விஷயம் சற்று சர்ச்சைக்குறியது. இந்தோனேஷியா, பர்மா இரு நாடுகளும் அதில் கலக்காதிருப்பதற்குக் காரணம், அவை பல்லாண்டு அடிமைப்பட்டும், முதலாளித்துவத்தின் அக்கிரமங்களுக்குட்பட்டிருந்தும் சமீபத்தில் விடுதலையடைந்தவை. ஆகவே அவை முதலாளித்துவத்திற்கு ஊக்கமளிக்கும் எந்த ஸ்தாபனத்திலும் சிக்கிக்கொள்ளாதிருக்கவே விரும்புகின்றனவென்சதே. மேலும் அந்நாட்டு மூலதனத்தை தமது கைகளில் கொண்டிருப்பவர்கள். உள்நாடு வெளிநாடு விவகாரங்களில் அமெரிக்க - பிரிட்டிஷ் முதலாளிகளின் தாசர்களாயிருக்கின்றனர். ஆகவே அரசியல் விடுதலைபெற்றபின் பொருளாதார அடிமைச்சங்கிலிகளால் தங்களைப் பிணைத்துக்கொள்ள அந்நாடுகள் விரும்பவில்லை. காமன்வெல்த் நாடுகளோ, மேற்கத்தி ஜனநாயகத்தை வளர்க்கவே விரும்புகின்றன. ஆகவே தங்கள் நோக்கம் நிறைவேறவும் பொதுவுடைமை சோஷலிஸ ஆட்சி முறை ஏற்படாதிருக்கவும், எவ்வித திட்டத்தையும் ஏற்க தயாராயிருக்கின்றன. அத்திட்டங்கள், நிறந்தரமற்றதும், நம்பிக்கையற்றதுமாயிருப்பினும் அவர்களுக்கு லட்சியமில்லை.

பிரிட்டிஷ்—அமெரிக்க உதவி.

கொழும்பு திட்டம் தயாரிக்கப்பட்ட நிலைமை இன்றில்லை. முழுதும் வேறு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டதால், பிரிட்டிஷ்-அமெரிக்க உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லை. 1951-முதல் "மார்ஷல் உதவியை பிரிட்டன் பெறாது. மேலும் தற்கால குழப்பமான நிலைமையில், ஆயுத உற்பத்தி, பாதுகாப்பு திட்டங்களை நிறைவேற்றுவது போன்ற காரியங் ளே பிரிட்டனுக்கு முக்கியம் அமெரிக்காவில் ரிபப்ளிகன் கட்சி பலமடைந்துவருவதால் யுத்த அபாயம் பெருகிவிட்டது சமூக, பொருளாதார சீர்திருத்தங்களால் பொதுவுடைமையை எதிர்க்க அக்கட்சியார் விரும்பவில்லை டாலருக்குப் பதில் துப்பாக்கிக்குண்டுகளே பலநளிக்கக்கூடியவையென்று நம்புகின்றனர் ஆகவே இந்நிலைமையில் அமெரிக்கா - பிரிட்டிஷாரிடமிருந்து தகுந்த உதவி கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது

கம்யூனிஸ்ட் பிரசாரத்திற்கு எதிர்ப்பு.

பொதுவுடமையை ஏட்டளவு திட்டங்களால் எதிர்க்க முடியாது. நல்ல காரிய திட்டமே தேவை. இதயங்களைக் கவரும் பொதுவுடமை ஸ்லோகங்களுக்கெதிராக, கவைக்குதவாத மேல்கத்தி ஜனநாயக ஜய கோஷங்கள் எவ்வித பலனும் அளிக்க முடியாது. "ஆசிய நாடுகள் வறுமை மிக்கவை. ரஷியாவும் ஏழ்மை மிகுந்ததே யிருந்தது". என்ற இரு விஷயங்களை ஆசிய மக்கள் உணருகின்றனர், இன்று ரஷியா பலமுள்ள நாடாகிவிட்டதையும் காண்கின்றனர். மேற்கத்தி வல்லரசுகளைவிட அதிக பலமும் செல்வமும் பெற்று விளங்கும் ரஷியாவை சிருஷ்டித்தது பொதுவுடமையே என்பதை அவர்கள் அறிவர். ஆசிய மக்களின் இந்நம்பிக்கையை முறியடிக்க கொழும்புத்திட்டம் ஏட்டளவிலன்றி செயலளவிலும் இறங்கவேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அத்திட்டம் நிறைவேறும் என்ற நம்பிக்கை அற்றுப்போய்விட்டது. ஏனெனில் தெற்கு, தென்கிழக்கு நாடுகளை சமூக, பொருளாதார சீர்திருத்தங்களால் முன்னேற்றுவதை விட்டு, ராணுவத்துறையில் உதவியளித்து முன்னேறச் செய்ய முயன் வருகிறது. அமெரிக்க - பிரிட்டிஷ் கோஷ்டி போர்ட்சயீத் (எகிப்து) முதல், ஹோகேடோ (ஜப்பான்) வரை ராணுவ அணியொன்று ஸ்தாபிக்க முயன்று வருகிறது, இத்தகைய நிலைமையில் கொழும்பு திட்டத்திற்கு என்ன மதிப்பு இருக்கப்போகிறது.

Registered No. 5068

தந்தி விலாசம்:— "கோகுல்" ஸ்தாபிதம் 1909 டெலிபோன் நெ 57

டி.எஸ்.ஆர்.அண்.கோ.

கும்பகோணம்.

பிராஞ்சு:— மதராஸ் & மன்னார்குடி

சந்தனாதித்தைலம், அரைக்கீரை விதைத்தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும் குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை

மற்றும்

கோகுல் ஊதுவத்திகள், பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, வாசனைப்பாக்கு, வாசனை சுண்ணாம்பு, அரகஜா முதலிய இதர சாமான்களும் கிடைக்கும்.

பீடி சக்கரவர்த்தி

RAMSAIT BEEDI

த.பி.சொக்கலால்

முக்கூடல்

ராம்சேட் பீடி

த.பி.சொக்கலால் ராம்சேட் பீடி முக்கூடல்

Printed by V. Jayaram at Sri Rama (Power) Printing Works, 38, Sarangapani East Vadamboki St., Kum
Edited and Published by Moulana Abdul Hakeem, 4, Kumbeswaran South, Kumbakonam